**OS.No.202/2019 P.W.1-பிரபாகரன் 20.07.2026**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

01.09.2025ம் தேதி குறுக்கு விசாரணையின் போது கட்டிட வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டது என்று சொல்லியுள்ளேன். தற்போது அதற்கான கட்டி முடிக்கப்பட்டு வீடு உரிய நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதா என்றால ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு ஒப்படைத்ததை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த வீடுகளில Associaton அமைக்கப்படவில்லை. பிரதிவாதிக்கு வீட்டினுடைய தாய் பத்திரங்கள், கட்டிட அனுமதி மற்றும் வரைபடம் ஆகியவை கொடுத்துள்ளேனா என்றால் அந்த இடத்தில் 6 வீடுகள் உள்ளது. கடைசியாக யார் வீடு வாங்குகிறார்களோ அவர்களிடம் கொடுத்து விடுவோம்.

2. வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 ஆவணங்களின் அடிப்படையில் முதல் தளம் மட்டும் அமைப்பதற்கான அனுமதி மட்டும் தான் உள்ளது, ஆனால் அதை மறைத்து 2வது தளத்தில் வீடு கட்டி அதை 2வது பிரதிவாதிக்கு விற்றுள்ளேன் என்றால் சரியல்ல. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவலின்படி 2ம் பிரதிவாதிக்கு 2வது தளத்தில் வீடு கட்டி அனுமதியில்லாமல் விற்றுள்ளேன் என்றால் சரியல்ல, முதல் மற்றும் தரைதளம் கட்டியுள்ளேன். 2வது தளம் அதற்குரிய அனுமதி பெற்று கட்டியுள்ளேன்.

3. வா.சா.ஆ.12 ஆவணத்தில் 8வது மற்றும் 9வது பக்கங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர வழங்குவதாகவும், 1 கிலோ வாட இன்வேட்டா அமைத்து தருவதாகவும் சொல்லியுள்ளேன், அவ்வாறு எந்த வசதியும் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. செய்து கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 ஆவணங்கள் போலியானவை என்பதால் 2வது பிரதிவாதி, துணை தலைவர் பதிவு துறை அவர்களிடம் மேல்முறையீடு செய்துள்ளார் என்றால் நானும் அந்த வழக்கில் தரப்பினராக சேர்ந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் அந்த ஆவணத்தில் உள்ள சொத்து வேறு சொத்தாகும்.

4. நான் கட்டி கொடுத்த வீடுகளில் நிறைய வசதிகள் குறைபாடு உள்ளது என்று வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிகள் கொடுத்தார்கள் என்றால் விஜயலட்சுமி என்பவர் மட்டும் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார். அதற்கு நான் பதில் கொடுத்துவிட்டேன். எனது பிரமாண

வாக்குமூலத்தில் பத்தி 22ல் சொத்தை ரூ.2,50,00,000/- வரை விற்கமுடியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் மீதமுள்ள விற்பனை தொகையை செலுத்துவது தொடர்பாக ஏதாவது உடன்பாடு உள்ளதா என்றால் இல்லை.

5. 2வது பிரதிவாதிக்கு நகராட்சியில் இருந்து 2ம் தளத்தை இடிப்பதற்கு நோட்டீஸ் வந்துள்ளது. அதற்கு 2வது தளத்தில் அனுமதியில்லாமல் வீடு கட்டியது தான் காரணம் என்றால் சரியல்ல. நான் போலியான ஆவணங்களை தயாரித்து அந்த ஆவணங்கள் மூலமாக 1 மற்றும் 2வது பிரதிவாதிகளுக்கு சொத்துக்களை விற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)